**அமெரிக்க வரைவுப் பிரேரணை:**

**19... இலங்கையில் நல்லிணக்கம் மற்றும் பொறுப்புக்கூறும் கடப்பாட்டை மேம்படுத்தல்**

ஐக்கிய நாடுகளின் சாசனத்தினதும், சர்வதேச மனித உரிமைகள் பிரகடனத்தினதும் , சர்வதேச மனித உரிமைகள் சமவாயங்களினதும் , ஏனைய பொருத்தமான பொறிமுறைகளினதும் வழிகாட்டலின் கீழ் இலங்கையில் நல்லிணக்கத்தையும் பொறுப்புக்கூறும் கடப்பாட்டையும் இலங்கை மேம்படுத்த வேண்டும்

நிறுவனங்களை மேம்படுத்துவது தொடர்பான மனித உரிமைகள் பேரவையின் 5/1 மற்றும் 5/2 பிரேரணைகளை நினைவுறுத்தி அரசாங்கங்கள் பயங்கரவாதத்திற்கு எதிராகப் போரிடுகையில் ,சர்வதேசச் சட்டத்திற்கு இணங்க, குறிப்பாகச் சர்வதேச மனித உரிமைகள் சட்டத்திற்கும்,அகதிகள் மற்றும் மனித நேயச் சட்டங்களுக்கும், உடன்பாடாகவும் கட்டுப்பாட்டுடனும்,நடந்து கொள்ள வேண்டும் என மீள உறுதிப்படுத்தப்படுகின்றது.

இலங்கையின் கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின்(LLRC) கண்டுபிடிப்புகளையும் பரிந்துரைகளையும் கவனத்திற் கொள்ளும் அதே வேளை, இலங்கையில் தேசிய நல்லிணக்க வழிமுறைக்கு ஆற்றக்கூடிய பங்களிப்பையும் ஏற்றுக் கொள்கின்றது.

இலங்கையின் கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின்அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள ஆக்கபூர்வமான பரிந்துரைகளை வரவேற்கின்றோம். அதே வேளை நீதிக்கு புறம்பாக இடம் பெற்றதாக மிகப்பரந்துபட்ட முறையில் குற்றஞ்சாட்டப்படும் கொலைகள் பற்றியும்,பலவந்தமான காணாமற்போதல் பற்றியும் புலனாய்வு செய்யப்பட வேண்டும். இலங்கையில் வடமாகாணத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ள இராணுவமயமாக்கலை நீக்க வேண்டும். காணித்தகராறுகளைத் தீர்ப்பதற்கான பக்கச் சார்பற்ற பொறிமுறைகள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். ஆட்கள் தடுத்துவைக்கப்படும் கொள்கைகளை மீள மதிப்பாய்வு செய்தல் வேண்டும். முறைசார் சுதந்திரச் சிவில் நிறுவனங்கள் வலுவூட்டப்பட வேண்டும். மாகாணங்களுக்கு அதிகாரப் பகிர்வை வழங்கக் கூடிய வகையில் அரசியல் தீர்வை எட்டுதல் வேண்டும், அனைவரது கருத்துச் சதந்திர உரிமைகளைப் பாதுகாத்து மேம்படுத்த வேண்டும். சட்டச் சீர்திருத்தங்களை மேற்கொள்வதற்கான சட்டங்களை இயற்றுதல் வேண்டும் என கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்கம் பற்றிய ஆணைக்குழு பரிந்துரைத்தபோதிலும், சர்வதேசச் சட்டங்கள் பாரதூரமாக மீறப்பட்டமை குறித்து மேற்படி ஆணைக்குழு அறிக்கை போதியளவு நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லை என அக்கறையுடன் குறிப்பிட வேண்டியுள்ளது.

1. கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்கம் பற்றிய ஆணைக்குழு அறிக்கையில் பரிந்துரைக்கப்பட்டுள்ள ஆக்கபூர்வமான பரிந்துரைகளை நடைமுறைப் படுத்துமாறு இலங்கை அரசைக் கோரும் அதே வேளை பொருத்தமான சட்டரீதியான கடப்பாடுகளை நிறைவேற்றுவதற்குத் தேவையான மேலதிக நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் அனைத்து இலங்கையருக்கும் நீதி,சமத்துவம்,என்பவற்றை உறுதிப்படுத்தும் வகையில் அனைத்து மேலதிக நடவடிக்கைகளையும் மேற்கொள்ளல் வேண்டும்.

2. கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்கம் பற்றிய ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதற்கும் சர்வதேசச் சட்டம் மீறப்பட்டதாக முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுகளுக்கு உரிய நடவடிக்கைகளை துரிதமாக மேற்கொள்வதோடு ஒட்டுமொத்தமான நடவடிக்கைத் திட்டத்தை இலங்கை அரசு சமர்ப்பிக்க வேண்டும்.

3. மேற்படி நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்துவதற்காக ஆலோசனை மற்றும் தொழில்நுட்ப உதவிகளை வழங்குவதற்கு இலங்கை அரசாங்கத்துடன் கலந்தாராய்ந்தும் இணக்கப்பாட்டின் அடிப்படையிலும் மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகத்தையும் தொடர்புபட்ட விசேட நடைமுறை ஆணையைக்கொண்ட தரப்பினரையும் ஊக்குவிப்பதுடன் மனித உரிமைகள் பேரவையின் 22வது அமர்விற்கு மேற்படி ஏற்பாடுகளைப் பற்றிய ஓர் அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டுமெனவும் மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகத்தை வேண்டுகின்றோம்.